பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 20 | செவ்வாய்க்கிழமை 06.11.2018 | கதிர் 01

எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## ஜனநாயகத்துக்கு எதிரான சதியைத் தோற்கடிக்க

# கூட்டமைப்பு-ஜே.வி.பி. ஓரணியில்!

### இரு தரப்புகளினதும் தலைவர்கள் கொழும்பில் நேற்று முக்கிய சந்திப்பு



கொழும்பு, நவம்பர் 06

நாட்டில் பிரதமர் நீக்கம் மற்றும் புதிய பிரதமர் நியமனம் என்பவற்றின் பின்னணியில் பாரிய அரசியல் சதித்திட்டம் இடம்பெற்றுள்ளது. அரசமைப்பு மீறப்பட்டுள்ளமை காரணமாக நாட்டின் ஜனநாயகமும், மக்களின் இறையாண்மையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் அரசமைப்புக்குப் புறம்பாக ஆட்சி அமைப்பதற்கோ, அரசைக் கவிழ்ப்பதற்கோ எம்மால் ஒருபோதும் இடமளிக்க முடியாது. எனவே, ஜனநாயகத்துக்கு முரணான சதித்திட்டங்களை நாடாளுமன்றத்தில் ஓரணியில் நின்று தோற்கடிக்க நாம் முடிவெடுத்துள்ளோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகிய இரு கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர். பக்கம் 11

### பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை மஹிந்தவை பிரதமராக ஏற்கமுடியாது!



#### சபாநாயகர் கரு நேற்று அதிரடி அறிவிப்பு

கொழும்பு, நவ.06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள போதிலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை அவரைப் பிரதமராக ஏற்க முடியாது எனச் சபாநாயகர் கருஜயசூரிய அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 7ஆம் பக்கம் 11

### சபாநாயகருக்கும் சமாதி கட்டுவோம்

மைத்திரி–மஹிந்த கூட்டணி எச்சரிக்கை

கொழும்பு,நவ.06

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுவதற்குச் சபாநாயகர் கருஜயசூரிய நடவடிக்கை எடுப்பாரானால், அவருக்கு எதிராகக் பக்கம் 11

இன்று
மூன்றாம் ஆண்டில்
உங்கள்
காலைக்கதிர்
Kalaikkathir

### நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்!

மைத்திரியிடம் நேரில் கோரினார் சம்பந்தன்

கொழும்பு, நவ. 06

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று நேரில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன். பக்கம் 11

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
முகவர்கள்
அனைவருக்கும்
இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்!

### இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கூட்டமைப்புப் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் ஒருமையில் 'நீ', 'நான்' என்று பகிரங்க மேடையில் திட்டிப்பேசியமையை அடுத்து, இருதரப்பு உறவுகளும் தகர்ந்து விடும், இனி அவர்கள் எப்படி முகத்துக்கு முகம் கொடுத்து நேரடியாகச் சந்தித்துப் பேசப் போகின்றார்கள் என்றெல்லாம் சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள்.

பக்கம் 02

### முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டேன் 113 எம்.பிக்களின் ஆதரவு பெற்றுள்ளேன்

ஜனாதிபதி மைத்திரிபால நேற்று முழக்கம்

கொழும்பு, நவம்பர் 06

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க 113 எம்.பிக்களின் ஆதரவைப் பெற்றுவிட்டேன். முன்வைத்த காலை இனி ஒருபோதுமே பின்வைக்கமாட்டேன்.

– இவ்வாறு நேற்று முழக்கமிட்டார் ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 11

### புதிய அரசை எவராலும் உடைத்துவிட முடியாது!

மஹிந்த ராஜபக்ஷ சூளுரை

கொழும்பு,நவ.06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்துக்கு மீண்டும் ஒருமுறை மரியாதை செலுத்துவதாகப் பிரதமர் மஹிந்த பக்கம் 11






காலைக்கதிர் Kalaikkathir



# ஜனாதிபதியின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்த முடியாது

## உயர்நீதிமன்றில் சட்டமா அதிபர் தரப்பு தெரிவிப்பு

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதற்காக ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை இடைநிறுத்துமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீதான மனுவுக்கு எதிராக அடிப்படை ஆட்சேபனை தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் நேற்று உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அறிவிப்பு அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனு மூலம் சவாலுக்கு உட்படுத்த முடியாதென்றும் சட்டமா அதிபருக்குப் பதிலாக ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இந்திக தெமுனி டி சில்வா உயர்நீதிமன்றத்தில் அறிவித்தார்.

மேலும் இந்த மனு உயர்நீதிமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை என்றும் அவர் மன்றில் சுட்டிக்காட்டினார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா – சர்வ சாதாரணமப்பா – என்ற கவுண்டமணி வசனம் தான் இதற்குச்சரியான பதில் என நினைக்கிறேன்.

*"உங்கள் கூட்டமைப்பினரையும் கூட்டிக்கொண்டு வந்து சந்தியுங்கள்!"*– என கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

அந்தச்சந்திப்புநாளைகாலை 10.30 மணிக்கு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்தக்கூட்டத்துக்குகூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பியுடன், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சித்தலைவர்களான மாவைசேனாதிராசா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைத் தம்முடன் கூட்டிச் செல்லலாம்என்பதுசம்பந்தனின் உத்தேசம்.

ஆனால், மாவை சேனாதிராசாவோ பிகு பண்ணுகின்றாராம். எங்கள்கூட்டமைப்பிலிருந்து ஒருவரைப் பிரித்தெடுத்து, பாதி அமைச்சர்பதவிவழங்கியஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுடன் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கின்றது என்பது மாவையின் நிலைப்பாடு.

*"போவோம். அந்த ஆட்சேபனையை – அது தொடர்பான எமது அதிருப்தியை – முதலில் அவரிடம் கூறி அதைப் பதிவு செய்வோம். அதன் பின்னரே என்ன விடயம் என்று பேசலாம். எங்கள் கருத்து நிலைப்பாட்டை நேரடியாகக் கூறலாம்."*– என்பது சுமந்திரனினதும் சித்தார்த்தனினதும் நிலைப்பாடு. அதனை சம்பந்தனும் அங்கீகரிக்கின்றார்.

அதனால், நாளை சந்திப்பு நடக்கும். ஜனாதிபதியை, பொது மேடையில் 'நீ' என்று விளித்துப் பேசிய சுமந்திரன், நாளை நேரில் அவரைச் சந்திக்கும் போது 'His Excellency' என்று கூற வேண்டியிருக்கும். அவ்வளவு தான்.

அதுதான்'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா' என்று நேரத்துடனேயே கூறிவிட்டேனே!.

ஆரம்பத்தில் மாவையர் கொள்கை, கோட்பாடு என்று பிகு பண்ணினாலும், இந்தச் சந்திப்பில் தனது தலைக்கறுப்பு தவிர்க்கப்படுவதற்குநிச்சயம் இடமளிக்க மாட்டார். தாமும் ஒட்டிக்கொள்வார் என்பது திண்ணம்.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கூட்டமைப்புத்தரப்புக்கும்இடையிலான ஊடாட்டம் இப்படி என்றால் , மறுபுறத்தில் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான ஊடாட்டம் மோசமடைந்திருக்கின்றது.

சம்பந்தன் மீது கடும் கோபத்தில் இருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பதை நேரடியாகவே உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

*"சம்பந்தனுக்கு தனிப்பட்ட தரப்புமூலம்கடும்செய்திஒன்றை அனுப்பியுள்ளேன்."*– என்கிறார் பிரதமர்மஹிந்தராஜபக்ஷசிறிது சீற்றத்துடன்.

*"என்னிடம் எழுத்தில் உறுதி மொழி கேட்கும் சம்பந்தன் ரணிலிடம் உறுதி மொழியை எப்படி வாங்கியிருக்கின்றார்?"*என்றும் கேட்டார்.

தென்னிலங்கை ஆட்சித் தரப்பைத் தீர்மானிக்கும் சக்தியாக தங்களை மாற்றி, கொழும்பில்அரசியல்சித்து விளையாட்டுக்களை 'சம்பந்தன் அண்ட் கோ' எடுப்பதாகக் கருதும் அவர் , இதனை முறியடித்து சரியான பாடம் படிப்பிக்க வேண்டும் என்று தமக்குள் கறுவிக் கொண்டு இருக்கின்றார் என்றும் கேள்வி.

தனிப்பட்ட தரப்புகள் மூலம் உரையாடி, பின்னர் தமது மகன் நாமல் ராஜபக்ஷவை அனுப்பிப் பேசி, அதற்குப் பின்பு தாமே நேரடியாக அழைத்துக் கலந்துரையாடிய போதும், சம்பந்தன் விட்டுக் கொடாமல் பிடிவாதம் காட்டுகின்றார் என்று கருதுகின்றார் போலும் மஹிந்தர்.

அவர்தான் பிரதமர், அவரிடம் தான் எதிர்கால அதிகாரம் என்பது உறுதிப்படுமானால் 'சம்பந்தன் – சுமந்திரன் கூட்டின்' எதிர்காலமும் சிக்கலாகத்தான் இருக்கும் போல...!.

★ ★ ★

இலங்கை அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல்குழப்பத்தைச் சீர்செய்வதற்காக அதிகாரத் தரப்புக்கு அழுத்தம் கொடுக்குமாறு மேற்குலக இராஜ தந்திரத் தரப்புக்களிடம் இங்கிருந்து கோரிக்கைகள் விடப்படுகின்றமை புரிந்து கொள்ளத்தக்கதே. அரசியல்கட்சிகளும், சமூக அமைப்புக்களும் இவ்வாறு கோரலாம்.

ஆனால், இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுள்ள பெரும் குழப்ப நிலைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த – அரசமைப்புக்கு முரணான – நடவடிக்கைகளே காரணம் என்று குற்றம் சுமத்தும் தமிழ்க் கூட்டமைப்பு, இந்த அரசியல் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டு, நியாயத்தை நிலை நிறுத்தச் செய்வதற்காக நேரடியாக இலங்கைவிடயத்தில் தலையிடுங்கள் என்ற கோரிக்கையை அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளிடம் எழுத்தில் முன்வைத்துள்ளதாக சில வட்டாரங்களில் நேற்று பேச்சடி பட்டது.

ஆனால், அந்தத் தகவலை கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், அடியோடும் மறுத்தார். அத்தகைய கோரிக்கை ஏதும் முன்வைக்கப்படவேயில்லை என்றார் அவர்.

எது, எப்படியென்றாலும் விடயம் மலிந்தால், விவகாரம் சந்தைக்கு வரத்தானே செய்யும்...!.

-மின்னல்

# அபிவிருத்திக்கான உதவிகளை அமெரிக்கா, ஜப்பான் முடக்கும்

## ரணில் விக்கிரமசிங்க முன்னெச்சரிக்கை

கொழும்பு, நவ. 06

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடியான அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் பில்லியன் கணக்கான அபிவிருத்தி நிதியுதவிகளை முடக்கும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனதுதிடீர்ப்பதவிநீக்கத்தின்பின்னர்இலங்கையில் ஜனநாயகத்தின் எதிர்காலம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ரொய்ட்டர்ஸ் செய்தியாளர்களுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியொன்றிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜப்பான் சுமார் 500 மில்லியன் டொலர் நிதியுதவிகளை வழங்க திட்டமிருந்தது. அந்தத் திட்ட நிதியுதவிகளை ஒத்திவைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்,

அத்துடன், தேசியநல்லிணக்கஉடன்படிக்கைக்கு ஏற்றவகையில்செயற்படாதபட்சத்தில், இலங்கையின் ஏற்றுமதி தீர்வைச் சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கையுடன் விலக்கிக் கொள்ள வாய்ப்புள்ளது–என்றார்.

கடந்த சில மாதங்களாக இலங்கை அரசியலில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையை அடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணிலைப் பதவி நீக்கம் செய்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார்.

இவ்வாறான ஒரு அதிர்ச்சி நகர்வானது நாட்டை அரசியல்நெருக்கடியில்தள்ளியுள்ளதாகரொய்ட்டர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், பதவியிறக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவி நீக்கம் தொடர்பாகச் சவால் விடுத்துள்ளதுடன், நாடாளுமன்ற வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தனது பதவியில் நிலைப்பேன் என்றும் கூறியுள்ளார். (ஐ)

# மன்னார் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தை முற்றுமுழுதாக விட்டு விலகிய ராணுவம்







மன்னார், நவ. 06

சுமார் 28 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த மன்னார் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்திலிருந்து நேற்றுக் காலை இராணுவம் முழுமையாக வெளியேறியுள்ளது.

இந்தக் கட்டடம் இராணுவத்தினரால் மன்னார் பிரதேசச் செயலகத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி மன்னார் நகர உதவி பிரதேச செயலாளர் சிவசம்பு கணகாம்பிகையினால் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரியிடம் உத்தியோகப்பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

எனினும் அந்தக் கட்டடத்திலிருந்த இராணுவம் முழுமையாக வெளியேறவில்லை. அத்துடன், வெளியேறுவதற்கு இராணுவத்தினர் கால அவகாசம் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் அந்தக் கட்டடத்திலிருந்த இராணுவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் முழுமையாக வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி மைத்திரியை 'நீ' என விளித்தமை சுமந்திரனின் தவறு

## சித்தார்த்தன் எம்.பி. கண்டனம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.06

நாடாளுமன்றஉறுப்பினர் சுமந்திரன், ஜனாதிபதியை ஒருமையில் விளித்து பேசியமை தவறு. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என புளொட் அமைப்பின் தலைவரும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

கந்தரோடையில் அவரது இல்லத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததவை வருமாறு:–

வவுனியாவில் நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழரசு கட்சியின் இளைஞரணி மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்உரையாற்றும்போது, ஜனாதிபதியை ஒருமையில் விளித்து உரையாற்றி இருந்தார்.

எதுஎப்படி இருந்தாலும்நாட்டின்ஜனாதிபதியை அவ்வாறு விளித்து இருக்கக் கூடாது. சரியோ பிழையோ அவர் நாட்டின் ஜனாதிபதி. அரசியல் ரீதியாக அவருடன் கருத்து மோதல் ஏற்படலாம். ஆனால் கீழ்த்தரனமான வார்த்தைகளால் பேசியதை ஏற்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் அரசுக்கு ஆதரவு கொடுப்போம் என எங்கும் குறிப்பிடவில்லை. தற்போதைய பிரதமர் நியமனமானது ஜனநாயகத்துக்கும் அரசமைப்புக்கு எதிரான நியமனம். அதனை நாம் எதிர்க்கின்றோம். எனவே தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணைக்கு நாம் ஆதரவு அளிப்போம். அது ரணிலுக்கான ஆதரவு அல்ல–என்றார். (ஐ–07)

# சபாநாயகரின் அறிவிப்பைமீறி சபை முதல்வராகினார் தினேஷ்

## நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்



கொழும்பு, நவ. 06

**ஒக்ரோபர் 26ஆம் திகதி இருந்த நாடாளுமன்றக் கட்டமைப்பு நிலையையே தாம் ஏற்றுக் கொள்கிறார் எனவும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையோ, அரசையோ அங்கீகரிக்கப்போவதில்லை எனவும் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று அறிவித்திருக்கும் நிலையிலும் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றச் சபை முதல்வராக நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியற் கட்சித் தலைவர்களுடன் கடந்த மூன்றாம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின்போது சபை முதல்வராக தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை எந்த நியமனங்களையும் அங்கீகரிக்கப் போவதில்லை என்ற சபாநாயரின் அறிவித்தலை மீறி நேற்று தினேஷ் குணவர்த்தன தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

தாம் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமே செயற்படுவதாக கூறியிருக்கும் நாடாளுமன்ற ஊழியர்கள் நேற்றுக் காலை தினேஷ் குணவர்த்தனவுக்காக நாடாளுமன்றத் கட்டடத் தொகுதியைத் திறந்துவிட்டுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சபாநாயகரின் உதவியாளர்கள், நாடாளுமன்றக் கட்டத்தொகுதியிலுள்ள அலுவலகர்கள் மற்றும் அங்கு கடமையிலுள்ள பொலிஸாருக்கும் முதலானவராகச் சபாநாயகரே அதிகாரமிக்கவராக விளங்குகின்றார். ஆனாலும் அங்குள்ள அலுவலர்களும் ஊழியர்களும் தாம் வர்த்தமானி அறிவிப்பின்படியே செயற்படுவோம் எனக் கூறுகின்றனர் எனச் செய்தியாளர் தரிஷா பஸ்டியன்ஸ் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# சபாநாயகரின் அறிக்கை; அரசு கடும் கண்டனம்

கொழும்பு, நவ. 06

சபாநாயகர் கரு ஜயசூரிய பக்கச் சார்பாகவும், கட்சிசார்பாகவும் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளமையானது அரசமைப்புக்கு எதிரானதென வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் சரத் அமுனுகம மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சபாநாயகரின் அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோ. சபாநாயகரின் அறிவிப்பானது தனிப்பட்ட, அரசியல் பழிவாங்கல்களுக்கு அமைய உள்ளது. இது சபாநாயகர் ஒருவருக்குப் பொருத்தமான விடயமல்ல.

சபாநாயகர் எந்தவொரு கட்சிக்கும் சார்பாகக் கருத்துரைப்பது அரசமைப்புக்கு எதிரானது–என்றார்.(ஐ)

# காரில் கஞ்சாவுடன் சென்ற மூவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது!

காரில் கேரளக் கஞ்சாவைக் கொண்டு சென்ற மூவரை ஓமந்தை பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவின் ஆலோசனையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் பொன்சேகாவின் நெறிப்படுத்தலில் ஓமந்தைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுரேஷ் த டி சில்வா தலைமையில் ஏ-9 வீதியில் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சம்மாந்துறை நோக்கிப் பயணித்த இந்தக் காரில் 1கிலோ 126கிராம் கேரளக் கஞ்சாவை எடுத்துச் சென்ற சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 24, 28, 29 வயதுடைய மூவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையுடன் அவர்கள் பயணித்த காரும் கைப்பற்றப்பட்டது.

# விக்கிக்கு ஆதரவாக நேற்று கிளிநொச்சியில் சுவரொட்டி



கிளிநொச்சி, நவ. 06

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை வரவேற்று கிளிநொச்சியின் பல இடங்களில் நேற்றுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியத்தின் காவலனே வருக! வருக! தடை தகர்த்து தமிழர் எம் உரிமை காக்க உங்களுடன் நாங்கள்! என எழுதப்பட்ட வசனங்களுடன் கிளிநொச்சி நகரெங்கும் இந்தச் சுரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டியின் கீழே வன்னி மக்கள் என எழுதப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி வட மாகாண முன்னாள் முதலமைச்சர் தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய தனது கட்சியை அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-100)

# ஐரோப்பிய ஒன்றியம் அரசுக்கு அழுத்தம் எதுவுமே தரவில்லை

## கண்டியில் கூறினார் சரத் அமுனுகம

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது எந்தவொரு அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார். மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விரைந்து ஜனநாயக ரீதியாக தீர்த்துக்கொள்ள வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளமையானது, இலங்கை மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் நோக்குடையது அல்ல.

ஐரோப்பிய ஒன்றியம் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்கியுள்ளது. அதனை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எந்த ஒரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

அவர்கள் இலங்கை மீது எந்த அழுத்தத்தையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும், பிற நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளைப் பழுதுபடுத்த வேண்டாம் எனக் கோரிக்கை முன்வைத்தனர்.

இவைதவிர மேலும் பல சலுகைகள் தொடர்பிலும் அவர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்–என்றார்.(ஐ)

# புதிய அரசைச் சபாநாயகர் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ கோரிக்கை

மஹிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக ஏற்றுக்கொண்ட சபாநாயகர் கரு ஜயசூரிய, புதிய அரசையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது அலரி மாளிகையில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்கிறார்கள் எனில், அது எமது சட்டத்தில் உள்ள குறைபாடு காரணமல்ல. அவசரமாக அவரை வெளியேற்றுவது சிறந்த பண்பாடு அல்ல என்பதால்தான் ரணில் உள்ளிட்ட குழுவினர் அங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் – என்றார். (ஐ)



எமது வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



HIKVISION
CCTV DEALER IN JAFFNA
ALDI ELECTRONICS
No.15, Stanly Road, Jaffna. T.P. 021 222 2676



வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

யாழ். நகரில் கண்கவர்
ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்!

சிவகணேசன்
ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2063

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மூன்றாம் ஆண்டில் காலைக்கதிர்

உங்கள் ‘காலைக்கதிர்’ நாளிதழுக்கு இன்று அகவை இரண்டு பூர்த்தியாகின்றது. மூன்றாவது ஆண்டில் அது அடியெடுத்து வைக்கின்றது.

ஆரவாரம் இல்லாமல் – தடல்புடல் கொண்டாட்டங்கள் இல்லாமல் – எம்மை வாழ்த்தும் பந்தா செய்திகளை நாமே தேடிப்பிடித்து அள்ளிக் கொட்டாமல் – சிறப்பிதழ் என்ற பெயரில் எம்மை இன்னொருவர் வாழ்த்துவதற்கு அவரிடம் விளம்பரக் கட்டணம் அறவிடும் ‘ வர்த்தகம்’ பண்ணாமால் – எமக்கு நிதி செலுத்தி, எம்மை வாழ்த்துமாறு விளம்பரத்தாரை வற்புறுத்தாமல் – இரண்டாம் ஆண்டு நிறைவை அடக்கமாகவும், பொறுப்புணர்வோடும், அமைதியாகவும் ‘காலைக்கதிர்’ கொண்டாடுகின்றது.

இந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் அது எதிர்கொண்ட அழுத்தங்கள் , சிக்கல்கள், நெருக்கடிகள், பின்னடைவுகள், கஷ்டங்கள், துன்பங்கள் ஏராளம்.

யாழ் குடா நாட்டில் நான்காவது தினசரியாகத் தோன்றிய ‘காலைக் கதிர்’ எல்லா சவால்களுக்கும் முகம் கொடுத்து நின்று காலூன்றியிருக்கின்றது.

‘காலைக்கதிர்’ நாளிதழ் மலர்வின் போது பிரசுரமான ‘விடியல் வீச்சு!’ சிறப்பிதழில் அது செய்து கொண்ட ‘நமது பிரதிக்ஞை’ என்ற கொள்கைக் கோட்பாட்டுப் பிரகடனத்தை ஒரு தடவை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

*“கதிரவனின் கதிர்கள் போன்று – கழனியிலே பூரித்துத் தலை சாய்க்கும் நெற்கதிர்கள் போன்று – இன்று உங்கள் கரம் தவழ்கின்றது காலைக்கதிர். தங்குதடையின்றி – காலகதி பிசகாமல் – காலைக்கதிரவனின் கதிர்கள் பார் மீது பரவுவது போல, காலைக்கதிரும் நாளாந்தம் தவறாமல் விடிகாலையில் உங்களைத் தேடிவரும்.”* – என்பதை எமது பிரதிக்ஞையாக எம் வெளியீட்டின் போது செய்திருந்தோம்.

அந்த உறுதி மொழியை – நாளது தவறாமல் – உங்கள் கரங்களில் காலைக்கதிரைத் தந்ததன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளாச் செவ்வனே நிறைவேற்றியிருக்கிறோம் என எண்ணுகிறோம்.

*“சமூக பிரக்ஞையுடனும், இணைவுணர்வுடனும் தனது மக்களின் சமூக விடுதலைக்காகக் கிளர்ந்தெழும் ஒரு பத்திரிகை தனது மக்களின் – தனது சமூகத்தின் – இருப்புக்கே கவசமாகவும் காவலரணாகவும் உயர்கின்றது. அந்த அரும்பணியே காலைக்கதிரின் இலக்கு.*

*‘உண்மை – நேர்மை – பக்கச்சார்பின்மை’ என்ற தாரக மந்திரத்தை வரிந்து கொண்டு, ஒரு புதிய – நீதி நாடிய – நேரிய – சீரிய – ஊடக தர்மத்தைத் தனது பாதையாக வகுத்துக் கொண்டு, நமது இனத்தின் விடியலுக்காகவும், உயர்ந்த சமூக மாற்றத்திற்காகவும் இன, மத நல்லிணக்கத்துக்காகவும் அர்ப்பணிக்கும் வகையில் காலைக்கதிர் தளராது பணியாற்றும்”.* – என்று எமது உயிர்ப்பு வேளையில் பிரதிக்ஞை செய்திருந்தோம்.

இந்த உறுதி மொழியை ‘காலைக்கதிர்’ செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளதா என்பதை வாசகர்கள் மதிப்பிட்டுத் தீர்மானிக்கும் வேளை இதுதான்.

இந்த இரண்டு ஆண்டுகளில் விலையில் எந்த அதிகரிப்பையும் செய்யாமல், பக்கங்கள் குறைக்கப்பட்டபோதிலும் தரத்தையும் விடயதானத்தையும் குன்றவிடாமல் உயரிய மட்டத்தில் பேணி வந்திருக்கிறோம்.

ஒரு பத்திரிகையின் உயிர்ப்புக்கு செய்திகள், பக்க வடிவமைப்பு, விநியோக முறைமை போன்ற பல்வேறு காரணிகள் அடிப்படையாக இருக்கின்ற போதிலும், இவற்றைவிட பிரதானமானது விளம்பர வரவேற்பாகும்.

உயர்ந்த தரத்தில், அழகான அச்சுவடிவத்தில் ‘காலைக் கதிர்’ தினசரி வெளிவரும் போதிலும், ஒரு பத்திரிகையின் உயிர் நாடியான விளம்பர வரவேற்பில் நாம் திருப்திப்படக்கூடிய இடத்துக்கு முன்னேறவே இல்லை. இது விடயத்தில் எமது மக்களின் ஆதரவை உரிமையுடன் கோரும் அதேசமயம், இது சம்பந்தமாக அவர்களுக்கு இருக்கவேண்டிய பொறுப்புணர்வையும் பதில் கடப்பாட்டையும் சுட்டிக்காட்டி நினைவூட்ட விரும்புகின்றோம்.

சமூக வலைத்தளங்கள், மின்னஞ்சல்கள், முகநூல்கள் பேன்றவை ஊடாக தினசரி அதிகாலையில் புலம்பெயர் தமிழர்களை அதிகம் தரிசனம் செய்யும் தமிழ் நாளிதழாக நாம் உயர்ந்திருக்கின்றோம் என்பது மன நிறைவைத் தரும் விடயமாகும்.

இத்துணை நெருக்கடிகள், கஷ்டங்களுக்கு மத்தியிலும் நம்முடன் தோள்கொடுத்து நிற்கும் நமது ஊழியர்கள் மற்றும் வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், செய்தியாளர்கள் அனைவருக்கும் இந்த ஈராண்டு நிறைவு நாளில் நன்றி கூறுகின்றோம்.

ம.வ. கானமயிலநாதன்
பிரதம ஆசிரியர்.

# சிவசக்தி ஆனந்தனைப் போன்று சோரம் போபவன் நான் அல்லன்

## சரவணபவன் எம்.பி. சாடல்



யாழ்ப்பாணம், நவ.06

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனைப் போன்றோ அவரது கட்சியைப் போன்றோ பணத்துக்கும் பதவிக்கும் சோரம் போபவன் நான் அல்லன்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

மஹிந்த அணிக்குத் தான் தாவி அமைச்சுப் பதவியையும் பணத்தையும் பெறவுள்ளார் என சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுமத்தியுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் சரவணபவன் எம்.பி. விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்போதைய அரசியல் குழப்ப நிலையில் நான் மஹிந்த பக்கம் தாவுவேனா இல்லையா என்கிற சந்தேகம் மக்களுக்கு இருக்கக்கூடும். முன்னாள் கொலைகார இயக்கத்தைச் சேர்ந்த சிலர் தம்மைப்போலவே பிறரையும் கருதி உருவாக்கிவிட்ட வதந்தி அது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் கூறுவதைப் போன்று மஹிந்த பக்கம் செல்வது பற்றிச் சிந்திப்பதைக்கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனக்கு. வாழ்வில் ஒருபோதும் கொள்கையைக் கைவிட்டு வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும் விலைபோகக் கூடியவன் அல்லன் நான். அத்தகையவனாக இருப்பேனாகில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் நிதி இழப்புக்கும் பொருள், சொத்திழப்புக்கும் மத்தியில் எனது பத்திரிகையை நடத்தியிருக்கவேண்டிய அவசியம் ஏதுமில்லை.

இத்தனை வருட காலங்களில் தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியம் குறித்து எனது பத்திரிகை எதைக் கூறியதோ எதைச் சொல்லியதோ அதுவே எனது என்றென்றைக்கும் மாறாத ஒரே கொள்கை.

தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு, விடுதலை இயக்கமாக உருவாகிப் பின்னர் தமது சொந்த மக்களையே கொன்று குவித்தும் கடத்திக் கப்பம் வாங்கியும் பிழைப்பு நடத்திய ஈபிஆர்எல்எவ் கட்சியைச்சேர்ந்தவர்களுக்கு, கொண்ட கொள்கையில் இருந்து தவறி விழுவதும் போலித் தேசியம் பேசிக் கொண்டே சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் கொஞ்சிப் குலாவுவதும் சாதாரணமான விடயமாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள் கடந்தகாலங்களிலும் இதுபோன்ற மக்கள் துரோகச் செயல்களைப் புரிந்து பழக்கப்பட்டவர்கள்.

ஆனால், நான் இந்த மண்ணிலேயே கடந்த 30 ஆண்டுகளாக மக்களோடு மக்களாக இருந்து சிங்கள, பௌத்த பேரினவாதத்தை எதிர்த்து தமிழ்த் தேசியத்தின் ஆணிவேராக ஒரு பத்திரிகையை நடத்தி நின்றவன். ஒரு சில கோடிகளும் அமைச்சுப் பதவிகளும் என் கால் தூசுக்குப் பெறா.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் மூலம் வரும் பணத்தை எதிர்பார்த்து வாழும் நிலையை ஆண்டவன் எனக்கு ஒருபோதும் வைத்ததுமில்லை.

அமைச்சுப் பதவிக்கும், பணத்திற்கும், பத்திரிகையை நடத்துவதற்கான வசதிகளுக்காகவும் நான் மஹிந்தவுடன் பேரம் பேசினேன் என்று வெட்கங்கெட்டத்தனமாக சிவசக்தி ஆனந்தன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய குரல் பதிவில் தெரிவித்திருக்கிறார். உண்மையில் மஹிந்தவுடன் பேரம் பேசியவர்கள் இவர்கள்தான். பின்னர் ரணிலுடனும் பேரம் பேசித் தமது கட்சித் தாவலைத் தள்ளிப் போட்டிருப்பவர்களும் இவர்கள்தான்.

பணத்துக்காகக் கூலிப் படையாகிக் கொலை செய்வதும், ஆள்களைக் கடத்தி கப்பம் கேட்டுப் பணம் பறிப்பதும் இவர்களுக்குப் புதியதல்ல.

ஆயுதங்களைக் காட்டி மக்களை மிரட்டி அதிகாரம் செலுத்தியவர்களும் இவர்கள்தான். எனவே எந்த வழியிலாவது பணத்தையும் பதவியையும் அடையலாம் என்கிற வழியில் பழக்கப்பட்டவர் தன்னைப் போலவே என்னையும் நினைத்துவிட்டார் போலிருக்கிறது.

நான் பணத்திற்கும் பதவிக்கும் விலைபோபவன் அல்லன் என்பதை வடக்கு முழுவதும் இருக்கும் மக்களில் எவரைக்கேட்டாலும் சொல்வார்கள் என்பதை அவருக்கு ஆணித்தரமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதியை எனது வீட்டுக்கு அழைத்தேன், அமைச்சர்களுக்கு விருந்து கொடுத்தேன் என்பதற்காக நான் அவர்களோடு இணங்கிப் போவேன் என்று நினைத்தது சிவசக்தி ஆனந்தனின் அறியாமை, அறிவுமட்டம்.

எனது கட்சி நாட்டின் தலைவர்களோடு சேர்ந்து ஒரு தீர்வைப் பெற இணக்கமான முறையில் முயன்று வந்தபோது அதற்கு உந்துசக்தியாக இருக்கும் வகையில் வாய்ப்புகளை உருவாக்கி ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் அழைத்துப் பேசி என்னால் முடிந்தவரையில் தமிழ் மக்களின் தேவைகளையும் போராட்ட நியாயங்களையும் புரிய வைக்க முயன்றிருக்கின்றேன். ஆனால், கட்சிக்கோ எனது தலைவர்களுக்கோ துரோகம் இழைக்க நினைத்ததில்லை.

ஆனால், சிவசக்திஆனந்தனும் அவரது கட்சித் தலைவரும் தமது கட்சியிலிருந்த மூத்த தலைவர்களுக்கு செய்த துரோகங்களைப் பற்றி ஈபிடிபியினரைக் கேட்டால் விலாவாரியாகச் சொல்வார். அப்படிப்பட்டவர், என்னை நோக்கிக் கை சுட்டிப் பேசவே தகுதியற்ற ஒருவர், நான் கட்சி தாவப் போகிறேன் என்று தெரிவித்ததை மக்கள் ஒருபோதும் நம்பத் தயாராயிருக்கவில்லை என்பதை அவர் இத்தனை நாள்களுக்குள் புரிந்துகொண்டிருப்பார்.

சிவசக்தி ஆனந்தன் இப்படிப் பொய் சொல்வது ஒன்றும் இது முதல் தடவையல்ல. தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலிடம் இருந்து 2 கோடி ரூபா பெற்றுவிட்டார்கள் என்று இவர் கூறிய பொய்யும் ஆடிய பித்தலாட்டமும் மக்கள் மனதில் இன்னமும் நீங்காமலேயே இருக்கின்றன. இதனால் சிவசக்தி ஆனந்தன் கூறுவதெல்லாம் பொய் தவிர வேறில்லை என்பதை உய்த்தறிய மக்களுக்கு அதிக நேரம் தேவைப்படாது.

சிவசக்தி ஆனந்தனைப் பார்த்து என்னுடைய ஒரேயொரு கேள்வி இதுதான், மஹிந்த பக்கம் போகாமல் இருப்பது குறித்து உங்கள் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலை மக்களுக்குப் பகிரங்கமாக வெளியிட முடியுமா? அதை வெளியிட்டால் போதுமே உங்கள் பேரம் என்ன என்பதை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு.

நான் பணம் பெறப்போகின்றேன் என்று பொய் சொன்ன சிவசக்திஆனந்தனால் உங்கள் கட்சித் தலைவர் ரணிலுடன் பேரம் பேசவில்லை என்று நிரூபிக்க சுரேஷ்பிரேமச்சந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையிலான உரையாடலை வெளியிட முடியுமா? இதுதான் என் சவால். – என்றுள்ளது.(ஐ)

### வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

“உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப் போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்.”

*-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)*

### நாளை

07.11.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: சித்திரை மு.இ. 8.46 வரை
திதி : சதுர்த்தசி மு.இ. 10.52 வரை
சுபநேரம் : 10.35 – 12.05 வரை
இராகுகாலம் : 3.05 – 4.35 வரை

# ரணில் இல்லாத தேசிய அரசை நிறுவ மைத்திரி ராஜித பேச்சு!

## ஜோன் அமரதுங்கவும் உடனிருந்தார்

கொழும்பு, நவ. 06

ரணில் விக்கிரமசிங்க இல்லாத அரசொன்றை ஏற்படுத்துவது குறித்து முன்னாள் அமைச்சர்கள் ராஜித சேனாரட்னவும் ஜோன் அமரதுங்கவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசியப் பேச்சுகளை நடத்தியுள்ளனர் எனக் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஆட்சியமைக்கும் முயற்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் சிறிசேன தனது அடுத்த கட்டத்திட்டத்தை முன்னெடுத்துள்ளார் எனக் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொது எதிரணியில் ஒரு பகுதியினர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினரை உள்ளடக்கிய அரசை அமைப்பதற்கு சிறிசேன முயல்கின்றார் எனக் கொழும்பு டெலிகிராவ் கூறியுள்ளது.

ராஜித சேனாரத்னவும் ஜோன் அமரதுங்கவும் நேற்று முன்தினம் சிறிசேனவைச் சந்தித்து இரகசியப் பேச்சு மேற்கொண்டுள்ளனர். தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்காகப் புதிய தேசிய அரசொன்றை அமைப்பது குறித்து அவர்கள் ஆராய்ந்துள்ளனர். ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சமமான அமைச்சரவை ஆசனங்களை ஒதுக்குவது குறித்தும் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.


ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு எந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரையும் பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்கு சிறிசேன இணங்கியுள்ளார். சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவியை வழங்கத் தயார் எனவும் சிறிசேன தெரிவித்துள்ளார் என கொழும்பு டெலிகிராவ் குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

# புதுடில்லி – மஹிந்த இடையே புரிந்துணர்வேதும் கிடையாது

## கூறுகின்றார் பேராசிரியர் முனி

புதுடில்லி, நவ. 06



புதுடில்லிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் எந்தவித மான பரஸ்பர நம்பிக்கையோ புரிந்துணர்வோ கிடையாது என்றும், ராஜபக்ஷவின் மீள் வருகையையிட்டு இந்தியா நிச்சயம் மகிழ்ச்சியடையவில்லை என்றும், இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியும், தெற்காசிய விவகாரங்களுக்கான நிபுணருமான பேராசிரியர் எஸ்.டி முனி தெரிவித்துள்ளார்.

'த ஸ்ரெற்ஸ் ரைம்ஸ்' இதழில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றிலேயே பேராசிரியர் எஸ்.டி முனியின் கருத்து இடம்பெற்றுள்ளது.

வெளிப்படையாக எதையும் கூறாவிடினும், ராஜபக்ஷவின் மீள் வருகை இந்தியாவுக்கு நிச்சயம் மகிழ்ச்சியை அளிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுக்கு (புதுடில்லியின்) அமைதியான ஆதரவு உள்ளது.

கடந்த கால அனுபவம், சீனா விடயத்தில் மாத்திரமன்றி– நன்றாக இருக்கவில்லை. தமிழர் பிரச்சினை உள்ளிட்ட இந்தியா எதிர்பார்த்த எதையும்,ராஜபக்ஷ நிறைவேற்றவில்லை.

புதுடில்லிக்கும், ராஜபக்ஷவுக்கும் இடையில் நம்பிக்கையோ, புரிந்துணர்வோ கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஐ)

# எந்தத் தேர்தலையும் நடத்த நாங்கள் தயார்

## தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, நவ. 05

எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்குத் தயார் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் சரியாகத் தீயணைப்புப் படைவீரர்களைப் போன்றவர்கள். தேர்தலை நடத்துமாறு உத்தரவு கிடைக்கப் பெற்ற உடனே நாம் செயற்படத் தொடங்குவோம்.மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கும் நாம் ஆயத்தமாகவே இருக்கின்றோம், உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் செயற்படத் தயார்.ஜனாதிபதி தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ எது அறிவிக்கப்பட்டாலும் அதனை நடத்துவதற்கு நாம் பூரண ஆயத்த நிலையில் இருக்கின்றோம்–என்றார். (ஐ)

# ஏ–35 வீதியில் விபத்து; 2 சிறுவர்கள் படுகாயம்

கிளிநொச்சி, நவ.06

கிளிநொச்சி – பரந்தன் ஏ–35 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர். பரந்தனிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த கார் ஒன்றுடன் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதுண்டதாலேயே நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் எனக் கூறப்படும் 15 வயதுச் சிறுவனும் மற்றுமொரு சிறுவனும் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ஐ)




Kajamugan Hardware

கஜமுகன் ஹாட்வெயர்

எமது வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள், அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

கட்டடப் பொருள்கள், லங்கா கம்பி, பைப் வகைகள், சிமெந்து, மெச்சன் மெஸ் வலைகள், பெயின்ற் வகைகள் மற்றும் Pepsi Soda & Accessories அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்...







147, 149, Stanley Road, Jaffna.

Tel : 021 222 2833, 021 222 7174, Fax : 021 222 2368
E-mail : Kajamuganhw@hotmail.com


147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

காலைக்கதிர் Kalaikkathir



# தீபாவளித் திருநாள் சிறப்பிதழ்

## அருளாசிச் செய்தி



இன்று தீபாவளிப் பண்டிகை நன்னாள். இது ஒரு புனிதமும் புண்ணியமும் நிறைந்த இனிய பொன்னாளாகும். இந்தத் தீபாவளி தமிழ் மக்களின் தனித்துவமான பண்பினை வெளிப்படுத்தும் இனிய கொண்டாட்டத்துக்குரிய திரு நாளாகும்.

அனைத்து மக்களும் புத்தாடைகள் அணிந்து புத்து ணர்ச்சி பொங்கிப் பிரவாகிக்க இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து நிற்கின்ற ஒரு நன்னாளாகும். உற்றார், உறவினர், நண்பர்களுடன் அளவளாவி மகிழ்ந்திருக்கும் இன்றைய தீபாவளிப் பண்டிகைப் புனித நன்னாளில் எல்லோரும் நலமே வாழவேண்டும் என்ற பெருநோக்கோடு வாழ்தலே சிறப்பைத் தருவதாகும்.

அத்துடன் இன்றைய தீபாவளிப் பண்டிகை நன்னாளிலே நாங்கள் அனைவரும் புத்தாடை அணிந்து, மூத்தோர் ஆசிபெற்று, தாய் தந்தையரை வணங்கி வாழ்த்தி அவர்களின் மனதைக் குளிரச் செய்து ஆசி பெற்றுப்பின்பு இறைவனை வணங்கி, ஏழைகளுக்கு அன்னதானம் செய்து இனிப்புப் பதார்த்தங்களையும் வழங்கி உளம் மகிழ்ந்து வாழ்த்துவதே மங்களகரமான சுபீட்சமான நல்வாழ்வுக்கு வழி வகுக்கும்.

ஆகவே, இன்றைய தீபாவளித் திருநாளில் ஈழம் வாழ் மக்கள் அனைவருமே நலமுடன் வாழ வழி பிறக்க வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி நல்கி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன குருமுதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.**

## இனிக்கும் தீபாவளியே! இதய தாகந் தீர்க்க வருக!!

இன்று தீபாவளித் திருநாள். இது தமிழர்களின் பெருநாளாகும். இந்தத் தீபத் திருநாளிலே வரிசையாகத் தீபங்களை ஏற்றி வைத்து அந்தத் தீப ஒளிப் பிரகாரத்திலே இறைவனைக் கண்டு வழிபாடியற்றிடும் பொன்னான நன்னாள் இது.

ஈழம் வாழ் மக்கள் எல்லோம் இந்த இனிய தீபாவளித் திருநாளிலே 'இனிக்கும் தீபாவளியே! எம் இதய தாகந் தீர்க்க வருக' என்று ஒரு மனதாக வரவேற்று மகிழ்ச்சியுடன் களிக்கும் மக்கள் மங்களகரமான சுபீட்சமாக நல்ல வாழ்வு வாழ வழிபிறக்க வேண்டும் என்று ஆசிகள் கூறி உளமார வாழ்த்து கின்றோம்.

ஆண்டிலே ஒரு முறை வரும் இந்தத் தீபாவளித் திருநாளிலே புத்தாடை அணிந்து சுற்றஞ் சூழ மகிழ்ந்திருந்து சந்தோஷங் கொண்டாட எல்லாம் வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானுடைய திருவருள் வாரி வழங்கப்படவேண்டும் என்று மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

**சிவப்பிரம்மஸ்ரீ**
**சொ.இ.விக்னேஸ்வரக்குருக்கள்**
ஈசான சிவாச்சாரியார்,
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்.

## தீபாவளி நல்வாழ்த்து


நரகாசுரனின் கொடுங்கோல் ஆட்சி முடிவுக்கு வந்த புனிதமான நாளே தீபாவளித் திருநாள். பல்வேறுபட்ட துன்பங்களுக்குள் சிக்குண்டு தவிக்கும் எமது மக்களுக்கு புதிய சகாப்தம் உருவாக வேண்டும் என்று இறைவனை அனைவரும் பிரார்த்திக்க வேண்டும்.

எமது மக்கள் தமது சுயத்தை இழந்து யாரோ ஒருவரின் தயவில் வாழ்வது போன்ற மாயையில் சிக்கித் தவிப்பது வேதனைக்குரியதாகும். அனைத்து இனமத மக்களும் தமது சுயத்தை இழக்காது சுதந்திர புருஷர்களாக வாழும்போது எமது சமூகம் இத்தகைய சுய சிந்தனை, சுயகௌரவம் அற்ற அடிமைத் தளைக்குள் சிக்கித் தவிக்கிறது. அந்நிய காலனித்துவ ஆட்சி முடிந்த பின்பும் இத்தகைய நிலை தொடர்வதை எமது பிரதேசத்தில் வாழும் புத்திஜீவிகள் தடுத்து நிறுத்த முன்வராதிருப்பது கவலைக்குரியதே. அனைவரும் கடந்த காலத்தில் நடந்த கசப்பான சம்பவங்களை மறந்து புதிய உத்வேகத்துடன் வாழ திடசங்கற்பம் பூணுவோமாக!

எமது மக்கள் உயரிய ஆத்மீக சிந்தை படைத்தவர்களாகத் திகழ எல்லாம் வல்ல ஆடல்வல்லான் திருவருளை இந்நாளில் இறைஞ்சி நிற்கின்றோம்.

**சி.சக்திகிரீவன்**
செயலாளர், இந்துசமயப் பேரவை, யாழ்.

## செஞ்சொற்செல்வரின் தீபாவளி ஆசிச் செய்தி



இந்துமக்களின் இனியவிழாதீபாவளி. அதர்மம் செய்பவர்களை இறைவன் அடக்குவான் என்ற உண்மையை உணர்த்தும் நாள் தீபாவளி. அக இருளையும், புற இருளையும் அகற்றும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் நாள் தீபாவளி. உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரதும் அன்பையும் பெருக்கும் நாள் தீபாவளி. இத் திருநாளில் அனைவரும் மகிழ்வாக வாழ எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன். அனைவருக்கும் இதயபூர்வஷமான வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதர்மங்கள் பல செய்த நரகாசூரன் தன் குற்றத்தினை உணர்ந்த நாளாகிய தீபாவளி நாளில் எம்மிடம் உள்ள அறியாமையைப் போக்கி நாம் அனைவரும் புனிதமாக வாழ முற்படவேண்டும்.

எங்கள் நாட்டில் ஆட்சிபீடத்தில் இருள் சூழ்ந்து போயுள்ளது. அகந்தையினாலே ஆட்சிப்பீடத்தில் உள்ளவர்கள் அனைவரும் தத்தளிக்கின்றார்கள். ஆண்டவன் அநியாயத்தை நீக்கித் தர்மத்தைக் காப்பான் என்பது உண்மை. தீமைகள் நிலைப்பதில்லை. தீயவர்கள் என்றோ அதற்குரிய வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்கள். அகந்தை அதிகரிக்கும்போது அனைவரும் தாம் வந்த பாதையை மறந்து விடுவார்கள். என்றோ ஒருநாள் அவர்கள் உணரும் வாய்ப்புக் கிட்டும். நரகாசூரன் சரித்திரம் அனைவருக்கும் நல்ல பாடமாக உள்ளது. சத்தியத்தைப் பேணாதவர்களுக்கு அரியாசனம் என்றும் ஆபத்தானது என்பதை சூரன், கஜமுகாசூரன், நரகாசூரன் வாழ்வு நமக்கு உணர்த்துகிறது. எனவே தீபத்திருநாள் அனைவரையும் நல்வழிப்படுத்தட்டும்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி வேஸ்தானம்.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

## திருப்பம் பல தந்திடட்டும்!

தீபாவளித் தினத்தில் தித்திப்பு உண்ணவேண்டும்
கோபமெனும் குணமகற்றி கொண்டாடி மகிழவேண்டும்
பாவமென நினைக்கின்ற செயலனைத்தும் துரத்தவேண்டும்
பக்குவமாய் ஒன்றுகூடி பாங்காக மகிழவேண்டும்

உள்ளமதில் உண்மைதனை ஊற்றெடுக்கச் செய்யவேண்டும்
கள்ளமுடை எண்ணமதை களைந்தெறியச் செய்யவேண்டும்
நல்லவர்கள் ஆசிபெற்று நம்வாழ்வு சிறக்கவேண்டும்
நமக்குவாய்க்கும் தீபாவளி நல்வெளிச்சம் காட்டிடட்டும்

ஆணவத்தைப் போக்குவென ஆண்டவனை வேண்டிநிற்போம்
அறஞ்செய்யும் எண்ணமதை அகம்நிறைய வேண்டிடுவோம்
அன்னைதந்தை மனம்வருந்தா அனைவருமே நடந்திடுவோம்
அனைவருக்கும் தீபாவளி அமைந்திடுமே அற்புதமாய்

ஆதரவு அற்றோரை அரவணைத்து உதவிடுவோம்
அநாதையெனும் கருத்ததனை அழித்துவிட எண்ணிடுவோம்
போதையுடன் உலவுவதை பொறுக்காமல் பொங்கிடுவோம்
நல்பாதையிலே செல்வதற்கு நம்மனதைத் திருப்பிடுவோம்

புத்தாடை உடுத்திடுவோம் புதுவெடிகள் வெடித்திடுவோம்
எத்திக்கு இருந்தாலும் எல்லோரும் மகிழ்ந்திடுவோம்
தித்திக்கும் தீபாவளி திருப்பம் பல தந்திடட்டும்
அர்த்தமுள்ள நல்லவற்றை ஆற்றிநின்று அகமகிழ்வோம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மெல்பேண்,
ஆஸ்திரேலியா.



## அறிவொளி பரவட்டும்...



சந்திரன் தன் ஒளியை வீசும்போது விண் மீன்களின் ஒளி மங்கிப்போகின்றன. சூரியன் தன் ஒளிக்கிரணங்களைப் பரவவிடும்போது சந்திரனின் ஒளி மங்கி விடுகின்றது. அதேபோல் நமக்கு இருக்கும் அறிவொளியானது பிரகாசிக்கத் தொடங்கும்போது மற்ற ஆனந்தங்களுக்கெல்லாம் மேலான ஆனந்தம் பிறக்கின்றது. அந்த அறிவொளிதான் தீபாவளி. அதாவது எல்லா ஆனந்தங்களையும் விட மேலான ஆனந்தத்தைத் தருவதுதான் அறிவொளியால் விளையும் தீபாவளி. இந்த அறிவொளி இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதர்களிடம் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. அப்படியிருந்தும் அந்த ஆனந்தம் முழுமையாக வெளிப்படவில்லை. என்ன காரணம்?

அற்ப விஷயங்களில் மனதைக் கலக்கவிடும்போது அறிவொளி மங்குகின்றது. நல்ல விடயங்களில் மனதைக் கலக்க விடும்போது அறிவொளி முழுமையாகப் பிரகாசிக்கின்றது. தீபாவளித் திருநாள் உணர்த்தும் தத்துவம் இதுதான்.

நரகாசுரனிடம் அந்த அறிவொளி இருக்கத்தான் செய்தது. ஆனால் ஆணவத்தின் காரணமாகத் தன்மனதைப் பிறரைக் கொடுமைப்படுத்துவதில் அவன் செலவிட்டான். அதனால் அறிவொளி மங்கி அவன் அழிய நேரிட்டது. இந்த உண்மைத் தத்துவத்தை உணர்த்துவதுதான் தீபாவளித் திருநாள். உங்கள் அறிவொளியை மறைத்துக் கொண்டிருக்கும் அற்ப விஷயங்கள் என்னும் திரைகளை விலக்குங்கள். அக்கணமே ஆனந்தம் நிறையும். அனைவருக்கும் தீபாவளி நல்லாசிகள்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர்**
(இந்து மதகுரு பீடாதிபதி)

## தீபாவளித் திருநாள் ஆசிச்செய்தி

அனைவருக்கும் இனிய தீபாவளித்திருநாள் நல்வாழ்த்துக்கள். தீபாவளி என்பது அதர்மத்தினை அழிப்பதும் தர்மத் தினைக் காப்பதுமாகும். இத்திருநாளில் பழிவாங்கல், விட்டுக்கொடுப்பின்மை, ஏமாற்றுதல், கருணையின்மை, வக்கிரபுத்தி முதலான மனதிலும் இருக்கக்கூடியதான அதர்மம் சார்ந்த குண இயல்புகளை இறைவன் அழித்து நல்லகுணஇயல்புகளை பிரகாசிக்கச் செய்தல் வேண்டும். யுத்தம் நிறைவடைந்த பிற்பாடும் நாம் எமது பண்டிகை காலங்களில் எப்பொழுதும் யுத்தத்தினால் பாதிப்படைந்த மக்கள் நலம்வேண்டி பிரார்த்திப்பது வழமையாகும். இருந்தபோதும் பிரார்த்தனையின் வலுக்குறைந்தே உள்ளது எனலாம். ஆதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றத்தினை சந்தித்து வருகின்றார்கள். எனவே இன்றைய நாளில் ஆலயங்களில் இறைவனை பிரார்த்தனை செய்யுங்கள். முழு நம்பிக்கையுடன் ஒன்றுபட்டு ஈடுபடுங்கள். இறையருளால் எம்மை சூழ்ந்திருக்கும் துன்பங்கள் நிச்சயமாக தீபாவளி திருவொளியால் விலகிவிடும். அனைவரும் இன்புற்றிருக்க வாழ்த்துக்களும் நல்லாசிகளும்.

**சுவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**
ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில்,
வீணாகான குருபீடம்.

## தித்திக்கும் தீபாவளியே! எமது வாழ்வில் ஒளியேற்ற வருக!!

இன்று தீபாவளிப் பண்டிகை. இந்த இனிய நல்ல நாளிலே நாங்கள் எல்லோரும் மங்களகரமான நல்வாழ்விலே மனமகிழ்ச்சியுடனும் நிம்மதியுடனும் சிறப்புற்றிருக்க உளமார வாழ்த்துகின்றோம்.

ஆனந்தமான தீபாவளி நன்னாளில் 'தித்திக்கும் தீபாவளியே! எமது வாழ்வில் ஒளியேற்ற வருக!!' என்று மனமார வரவேற்றுப் புத்தாடை அணிந்து மூத்தோர்களான தாய் தந்தையர் மற்றும் குரு முதலானோரை வீழ்ந்து வணங்கி ஆசிகள் பெற்று மகிழ்ந்திருக்க வாழ்த்துகின்றோம்.

'ஆண்டிலோர் தீபாவளியாம் அதை ஆண்டியும் கொண்டாடி மகிழ்ந்திருக்க வேண்டுமாம்' எனும் முதுமொழிக்கிணங்க ஈழம் வாழ் மக்கள் அனைவருமே சந்தோஷத்துடனும் மன மகிழ்ச்சியுடனும் உற்றார், உறவினர்களுடனே கூடியிருந்து உரையாடி, உறவு கொண்டாடி இன்புற்றிருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாளை உளமாரப் பிரார்த்தித்து நல்லாசி நல்கி மனமார வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டுவது இனிய நல்வாழ்வே'

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**
(வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஓதுவாமூர்த்தி)

# தீபாவளித் திருநாள் சிறப்பிதழ்

## ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி



பொறுமை, அடக்கம், அறிவு, ஆன்மீகம் போன்ற நற்பண்புகள் மனித மனங்களில் குடிகொள்ள வேண்டுமாயின் அஞ்ஞானம் எனும் இருள் அகல வேண்டும். அந்த இலக்கை அடையும் வகையில் ஒளி தீபங்களை ஏற்றி உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒளி தரும் தீபங்களால் தீமை எனும் இருள் அகன்று நன்மையெனும் ஒளி எழுவதைப் போல் வாழ்க்கையிலும் ஒளி எழ வேண்டும் என்பதையே தீபாவளி பண்டிகை குறித்து நிற்கின்றது. அத்தோடு ஒருவருக்கொருவர் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து அன்பை பரிமாறிக் கொள்ளும் ஒரு கலாசார நிகழ்வாக இத் தீபத்திருநாள் உலக மக்களை அன்பினால் இணைக்கின்றது.

பல தசாப்தங்களாக பகைமையினால் ஏற்பட்ட பல்வேறு வேதனைகளைச் சுமந்து நிற்கும் ஒரு சமூகம் என்ற வகையில், இனங்களுக்கு இடையேயான பகைமையை நீக்கி புரிந்துணர்வையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதன் மூலமே நாடும் மக்களும் நலம் பெறுவர் என்பதை நமது சமூகம் மிக நன்றாக உணர்ந்திருக்கும் இத்தருணத்தில் மலரும் தீபாவளி பண்டிகை நம்மவர்களுக்கிடையிலான கலாசார பந்தத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளக் கிடைத்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பாகும் என்பதே எனது எண்ணமாகும்.

தீமையை போக்கும் தீபத்திருநாளை மகிழ்ச்சியோடும் அர்த்த புஷ்டியோடும் கொண்டாடும் அதேவேளை, அதன்மூலம் அன்பையும் நற்பண்புகளையும் வளர்க்க முயற்சிக்கும் நம்மவர்களுக்கும் உலக வாழ் இந்துக்களுக்கும் எனது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மைத்திரிபால சிறிசேன**
ஜனாதிபதி

## சம்பந்தன் வாழ்த்து



இலங்கைவாழ்அனைத்து மக்களுக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் அபிலாஷைகள் என்பன பெரும் சவால்களை எதிர் நோக்கி யுள்ள இந்தச் சூழ்நிலையில், இந்த தீபத்திரு நாளானது தீயசக்திகளை முறியடித்து உண்மையும் நீதியும் நிலைநாட்டப்படுகின்ற ஒரு நாளாக அமைவதோடு, எமது மக்கள் நிரந்தரமான சமாதானத்தையும் உண்மையான சுதந்திரத்தினையும் அடைய இந்நன்னாளில் பிரார்த்தனை செய்கிறேன்.

எமதுமக்களின்அன்றாட வாழ்க்கையில் காணப்படும் இடர்கள் நீங்கி வளம்பெற எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

எமது மக்களும்இந்த நாடும் ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற இந்தநன்னாளில் இறைஞ்சுவோமாக.

**இரா.சம்பந்தன்**
எதிர்க்கட்சித் தலைவர்,
இலங்கை நாடாளுமன்றம்.
தலைவர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு

## நீடித்த மகிழ்ச்சிக்காக நிரந்தர ஒளியேற்ற அனைவரும் புதுநிமிர்வுடன் உழைப்போம்

### தீபாவளி வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்!

எமது மக்களின் வாழ்வில் நிரந்தர ஒளி வீசும் நீடித்த மகிழ்ச்சியின் வருகைக்காக புது நிமிர்வுடன் உழைப்போம் என்ற உறுதியுடன் பிறந்திருக்கும் தீபாவளித் திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம் என மீள்குடியேற்றம், புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது தீபாவளி தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில் –

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடி வெல்லும்.

எமது மக்களின் மனங்களில் விதைக்கப்பட்ட இந்த நம்பிக்கை முழுமையாக வெல்லும் காலத்தை நோக்கி நகர்ந்து செல்கிறது.

எமது வரலாற்று வாழ்விடங்களில் மாற்றங்கள் நிகழவேண்டும். வாழ்வெங்கும் துயர்களும் வலிகளும் வதைகளும் சுமந்த எமது மக்களின் இல்லங்கள் தோறும் நிரந்தர தீப ஒளிகள் ஏற்றப்பட வேண்டும்.

எஞ்சிய நிலங்கள் மீட்கப்படவேண்டும், அங்கெல்லாம் மக்களின் மீள்குடியேற்றங்கள் நிகழ வேண்டும். வளம் செழிக்கும் மாற்றாக எமது மக்களின் வாழ்வியல் புனரமைப்பபடவேண்டும். வறுமை அகன்று பொருளாதார அபிவிருத்தியை எமது மக்கள் அனுபவிக்க வேண்டும்.

வேலைவாய்ப்பு மற்றும் தொழிற் றுறைகள் ஊக்குவிக்கப்படவேண்டும் சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.



எமது மக்களின் கலை காலாசார பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். காணாமல் போனோரின் உறவுகளின் கண்ணீருக்குப் பரிகாரம் பெற்றுக்கொடுக்க வேண்டும். தடைகளை வென்று எம்மால் தொடரப்பட்ட பணிகளை விட்ட குறையில் இருந்து முன்னெடுத்து முடிந்தளவு முயற்சியின் வெற்றிகளை காண்போம் என்றும்.

நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய எமது இலட்சியப் பயணத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொது நோக்கில்,

எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் தோறும் மகிழ்ச்சி மிக்க மாற்றங்களை உருவாக்க உழைப்பேன் என்ற உறுதியோடும், பிறந்திருக்கும் தீபாவளித் திருநாளைக்கொண்டாடும் மக்களின் மனங்களில் நம்பிக்கை ஒளி ஏற்றி வாழ்த்துகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## வாழ்த்துச் செய்தி



மலரும் தீபத்திருநாள் எமது மக்களுக்கான வாழ்வியல் விடிவை பெற்றுத்தரும் நாளாக அமைய வேண்டும், போர் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்த நிலையில் வாழ்வியலில் குறிப்பிடுமளவுக்கு எதனையும் எட்ட முடியாத நிலையிலுள்ள மக்களுக்கான விடிவை இந்த தீபத்திருநாள் கொண்டு வர வேண்டும்.

மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்ப சாத்தியமான, ஏற்புடையதான வழிமுறைகளை தலைமைகள் முன்னெடுப்பதனூடாகவே உண்மையான விடிவை நோக்கிய அரசியல் பயணத்தை வெற்றிகரமாக முன்னகர்த்த முடியும். துரதிஷ்டவசமாக மக்களின் ஆணையை தொடர்ந்து பெற்றுவரும் தமிழரசுக்கட்சி எமது மக்களின் முன்னேற்றத்திற்காக ஒரு துரும்பைக்கூட தூக்கவில்லை என்பது நடைமுறை அனுபவம் ஆகும்.

எமது விடிவை நோக்கிய பயணத்தில் மக்கள் சரியான பாதையில் பயணிப்பதற்கும் சகல சௌபாக்கியங்களை பெற்றுக்கொள்வதற்கும் இத்தீபாவளி தினத்தில் உறுதி பூணுவேமாக.

**வை.தவநாதன்**
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
கிளிநொச்சி மாவட்ட நிர்வாகச்
செயலாளரும் முன்னாள் வட
மாகாணசபை உறுப்பினரும்.

## தித்திக்கும் தீபாவளி

இன்று தீபாவளித்திருநாள். இது தமிழர்தம் வாழ்வில் ஒரு மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தவல்ல இனிய பெருநாளாகும். தீபாவளி என்றால் என்ன? தீபம் என்றால் விளக்கு, ஆவளி என்றால் வரிசை. அதாவது தீபங்களை அடுக்கடுக்காக வரிசைக்கிரமமாக ஏற்றி வைத்து அதன் தீப ஒளிப் பிரகாசத்திலே இறைவனைக் கண்டு வணங்குதலாகும்.

அந்த வகையில் இன்றைய தீபாவளி நன்னாளில் நாம் அனைவரும் ஒருமனதாக ஒற்றுமையாக..... உண்மையான உள்ளன்புடனே கடவுளை வணங்கி, இனிமேலாவது இலங்கை மண்ணில் அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் மங்களமும் பல்கிப் பெருக வேண்டும் என்றும் அனைத்து மக்களும் சந்தோஷத்துடனும் மன ஒருமைப்பாட்டுடனும் அமைதி பேணும் உத்வேகத்துடனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வழி பிறக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

சம்பிரதாய பூர்வமாக அனைவரும் புத்தாடை அணிந்து உற்றார், உறவினர், நண்பர்களுடன் கூடியிருந்து உறவு கொண்டாடி இனிப்புப் பதார்த்தங்களைப் பரிமாறி மகிழ்ச்சியோ அளவளாவி மகிழ்ந்திருக்க இந்தத் தீபாவளி ஒளியேற்றட்டும்.

ஆகவே, இன்றைய தீபாவளிப் பண்டிகையை அன்புடன் ஆனந்தமாக வரவேற்று எம் வாழ்வில் வளம் பிரகாசிக்க வழிபிறக்க வகை செய்ய வேண்டும் என்று இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து மகிழ்ந்து – இறும்பூதெய்தியிருப்போமாக!

**தெய்வத்தமிழ்ச்சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO -882
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்



தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE- 077 722 6247
021 2217678, 0776140361
sasika Learners
sasika driving School@gmail.com.

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

★ விண்ணப்பதாரிக் கட்டணங்களை தவணை முறையில் அடிப்படையில் செலுத்த முடியும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
★ எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
★ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
0703013012

கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021 224 3393
0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281C , மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 222 8004, 0703015004

வாகன விபத்தை தவிர்ப்போம்
உயிர்களைக் காப்போம்.

# ஜனாதிபதி முடிவின் விளைவு ஜெனீவாவில் எதிரொலிக்கும்

## பாக்கியசோதி கடும் எச்சரிக்கை



கொழும்பு, நவ. 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது எடுத்துள்ள முடிவு, அடுத்த ஜெனீவா அமர்வில் இலங்கையைப் பாதிக்கும் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமரை மாற்றியமை, நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமை ஆகியன அரசமைப்புக்கு முற்றிலும் முரணானதென்றும், சட்டவிரோதமானதென்றும், ஜனநாயக மீறல் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதனால் பொருளாதாரம், நாட்டின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை என்பன குறைவடைந்துள்ளதெனக் குறிப்பிட்ட பாக்கியசோதி சரவணமுத்து, விரைவில் நாடாளுமன்றத்தைக் கூட்டி இதற்குத் தீர்வு காண வேண்டுமென வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி, அரசியல் ஸ்திரமற்ற நிலையிலுள்ள நாடு என இலங்கை முத்திரை குத்தப்பட்டு, அதனால் நாட்டின் பொருளாதாரம் கீழ்மட்டத்திற்குச் செல்லுமென்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் 5 மாதங்களில் கூடவுள்ள ஜெனீவா அமர்வில் இலங்கையின் தற்போதைய நிலை பாதிப்பை ஏற்படுத்துமென்றும், அது இலங்கைக்குப் பின்னடைவாக அமையும் என்றும் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

# பீல்ட் மார்ஷலைப் பறிக்க சட்டத்தில் இடமில்லை

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, நவ. 06

பீல்ட் மார்ஷல் பட்டத்தை நீக்குவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பறிக்க ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்நிலையில், கம்பஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சரத் பொன்சேகாவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

அதற்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பீல்ட் மார்ஷல் பட்டத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் காணப்படுகின்றபோதும், அதனை நீக்கு வதற்கான ஏற்பாடுகள் இல்லையென அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இறுதி யுத்தத்தின்போது இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த சரத் பொன்சேகாவுக்கு, யுத்தத்தின்போது அவர் ஆற்றிய பணிகளை பாராட்டி பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டது. நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பட்டத்தை வழங்கியதோடு, இலங்கையில் இந்தப் பட்டத்தைப் பெற்ற முதலாவது நபர் என்ற பெருமையும் சரத் பொன்சேகாவையே சாரும்.

எனினும், ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டதில் சரத் பொன்சேகாவுக்கும் பங்குண்டு என அண்மைய காலமாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அதன் பின்னணியில், சரத் பொன்சேகாவின் பீல்ட் மார்ஷல் பட்டத்தை நீக்க ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸாருக்கு காணி வழங்க மறுத்தது வவுனியா நகர சபை

வவுனியா, நவ. 06

வவுனியா நகர மத்தியில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை எழுதித் தருமாறு கோரிய பொலிஸாரை நகர சபைத் தலைவர் திருப்பி அனுப்பினார்.

நகரசபைக்குச் சொந்தமான இந்தக் காணியில் நீண்ட காலமாக வவுனியா பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்றது. அந்தக் காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு எழுத்தித் தருமாறு கோரி நகரசபைக்கு வந்த பொலிஸாரை வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் திருப்பியனுப்பினார்.

இது தொடர்பாக நகரசபை தலைவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான காணியில் நீண்ட காலமாக வவுனியா பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்றது. இதனை விடுவிக்குமாறு பல தடவைகள் நகர சபையினால் கோரிக்கை விடப்பட்டபோதிலும் இதுவரை பொலிஸார் அந்தக் காணியை விடுவிக்காது அங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று நகரசபைக்கு வருகை தந்த இரு பொலிஸார், அந்தக் காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு எழுதி தருமாறும், பொலிஸ் நிலையம் அமைப்பதற்குத் தமக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையால் காணியைக் கோருவதாகவும் கூறினர்.

எனினும் அந்தக் காணியை எக்காரணம் கொண்டும் பொலிஸாருக்கு தரமுடியாது என நான் தெரிவித்துடன், வவுனியா மக்கள் அந்தக் காணியை நகரசபை பெற்று அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி நிற்கும் போது இவ்வாறான செயலைச் செய்து மக்களுக்குத் துரோகம் செய்ய முடியாது எனத் தெரிவித்துத் திருப்பியனுப்பிவிட்டேன்– என்றார்.

(ஐ)

# அமைச்சின் எந்த நிறுவனத்திலும் முறைகேடுகளுக்கு இடமில்லை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 06

வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளும், அதன் உற்பத்திகளும், எமது கடற்தொழிலாளர்களுக்கு உதவியாகவும், தரமானதாகவும், நியாயமான விலையில் கிடைப்பதாகவும் அமைந்திருக்கவேண்டும். தரமற்ற பொருள்களையோ, அதிக விலைச்சுமையையே மக்கள் மீது சுமத்துவதாக எந்தச் செயற்பாடும் இருக்கக்கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு,வடக்கின் அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற வடகடல் நிறுவனத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் விடே கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா–

வடகடல் நிறுவனத்தைச் செயலூக்கம் உள்ளதாகவும், மக்களுக்கு பயனுள்ளதாகவும் செயற்படுத்த வேண்டும் என்று முன்னர் ஆட்சியில் இருந்தபோது பல திட்டங்களை முன்னெடுத்திருந்தேன். இடையில் நடைபெற்ற ஆட்சி மாற்றங்களும், அதன் பின்னரான நிர்வாக மாற்றங்களும் எவ்வாறான செயற்திட்டங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பது தெரியாது.

அவை கடந்தவையாக இருந்தாலும், அந்த நிறுவனத்தைச் சரியான பாதையில் முன்கொண்டு செல்லவேண்டும். அதன் கொள்வனவுகள், விற்பனைகள் தொடர்பான விடயங்களில் எவ்விதத்திலும், முறைகேடுகளுக்கோ, துஷ்பிரயோகங்களுக்கோ நான் இடமளிக்கப்போவதில்லை. பொதுவாக நான் அந்தப் பொறுப்பை ஏற்று வழி நடத்தும் எந்த நிறுவனத்திலும் நான் தவறுகளுக்கு இடமளிக்கப்போவதில்லை.

எனவே வடகடல் நிறுவனமானது, தரமான உற்பத்திகளைத் தயாரிப்பதிலும், தரமான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதிலும் கூடுதல் கவனமாகச் செயற்படுவது அவசியமாகும். அதேபோல் அந்த நிறுவனத்தை நம்பி வாழும் தொழிலாளர்களின் நலன்களையும் அக்கறையோடு கவனிக்க வேண்டும்–என்றார். (ஐ)


எமது வாடிக்கையாளர்கள்,
விநியோகஸ்தர்கள்,
விற்பனையாளர்கள்
அனைவருக்கும்
எமது தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
VSB TRADING COMPANY
(PRIVATE ) LIMITED
VSB
Agents For : Prima Ceylon Limited
Prima SRI LANKA 1977 FLOUR MILLS
No : 140, Kasthuriyar Road, Jaffna, Srilanka.
021 222 7195, 021 222 7196 021 222 6968 vsbtc5@gmail.com
021 222 2653

# சரியானதைச் சரியான நேரத்தில் மக்கள் நலன் சார்ந்து எடுப்போம்

## சுமந்திரன் எம்.பி. ஆணித்தரம்

வவுனியா,நவ.06

இன்றைக்கு நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கின்ற சக்தியாக நாம் இருக்கின்றோம். அதைக் கவனமாகப் பிரயோகிக்க வேண்டும். சரியானதைச் செய்யவேண்டும். அதேவேளையிலே பேரம் பேசவேண்டும். இரண்டையும் செய்கின்றோம். வருகின்ற நாள்களிலே எங்களுடைய மக்கள் குழம்பக்கூடாது. ஏன் இவரைச் சந்தித்தார்,ஏன் அவரைச் சந்தித்தார் என்று. சந்திக்கின்ற எல்லாரையும் நாம் சந்திப்போம். ஆனால் எடுக்கின்ற தீர்மானம் தவறானதாக அமையமாட்டாது. அப்படி ஒரு தீர்மானத்தை நாங்கள் எடுக்கமாட்டோம்.சரியான தீர்மானத்தைத்தான் நாங்கள் எடுப்போம். எங்களுடைய மக்களின் நலன் கருதித்தான் அந்தத் தீர்மானம் எடுக்கப்படும்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் –

இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் வந்தபோது நான் ஆற்றிய உரையை ஓர் அன்பர் அப்படியே அதைத் தட்டச்சு செய்து ஐயா இதெல்லாம் முடிந்துவிட்டதே என்று கீழே எழுதியிருந்தார். நான் அவரிடத்தில் கூறினேன், எதுவும் இன்னமும் முடிவடையவில்லை என்று. அவ்வாறு முடிந்தது என்று நாம் எண்ணுவோமாயின் நம்பிக்கை இழந்தவர்கள் ஆகிவிடுவோம்.

இன்றைக்கு நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கின்ற சக்தியாக நாம் இருக்கின்றோம். 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று மாறியதால் 15 ஆகிவிட்டது. இங்கு சுற்றித்திரிகின்ற ஒன்று மீதும் எமக்கு நம்பிக்கை இல்லை. அதுவும் போகலாம். போனால் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஆயினும் தீர்மானிக்கின்ற சக்தி நாங்கள்தான். அதைக் கவனமாகப் பிரயோகிக்கவேண்டும்.

சரியானதைச் செய்யவேண்டும். அதேவேளையிலே பேரம் பேசவேண்டும். இரண்டையும் செய்கின்றோம். வருகின்ற நாள்களிலே எங்களுடைய மக்கள் குழம்பக்கூடாது. ஏன் இவரைச் சந்தித்தார், ஏன் அவரைச் சந்தித்தார் என்று. சந்திக்கின்ற எல்லாரையும் நாம் சந்திப்போம். ஆனால் எடுக்கின்ற தீர்மானம் தவறானதாக அமையமாட்டாது. அப்படி ஒரு தீர்மானத்தை நாங்கள் எடுக்கமாட்டோம். சரியான தீர்மானத்தைத்தான் நாங்கள் எடுப்போம். எங்களுடைய மக்களின் நலன் கருதித்தான் அந்தத் தீர்மானம் எடுக்கப்படும்.

"ஏலம் முடிவடையும் வரைக்கும் நாடாளுமன்றம் மூடி வைக்கப்பட்டுள்ளது" என்றொரு செய்தியைப் பார்த்தேன். சிங்களத்தில் போட்டிருக்கின்றார்கள். "வெந்தேசிய விரவணகால் பசா அத்த". அது தான் நடக்கின்றது. யாருக்கும் தெரிந்த விடயம். ஏன் பூட்டிவைத்திருக்கின்றார்கள்? ஏன் நாடாளுமன்றத்துக்குப் போக முடியவில்லை? நாடாளுமன்றத்தைத் திறக்கவிட்டால் நாங்கள் போய் திறப்போம். நாங்கள் போய் அமர்வோம். பெரும்பான்மையை உலகத்துக்கு நாங்கள் காண்பிப்போம். அதை அங்கு இருந்துதான் காட்டவேண்டும் என்றில்லை. அதை எங்கே இருந்தும் காட்டலாம். – என்றார். –(ஐ)

# மாணவர்களுக்கு இனிமேல் சீருடை

## வவுச்சர் முறைமையை நீக்குகிறது கல்வி அமைச்சு

கொழும்பு,நவ.06

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சீருடைத் துணிக்கான வவுச்சர் வழங்கும் திட்டம் ஒழிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்குப் பதிலாகச் சீருடை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கல்வி அமைச்சராக விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த வாரம் பதவியேற்றதன் பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.(ஐ)

# 25,000 வீடுகளை அமைக்க அனுமதி கோரினார் டக்ளஸ்

கொழும்பு,நவ.06

வடக்கில் 25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் முதற்கட்டமாக இவ்வருட இறுதிக்குள் 15 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அனுமதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் கோரியுள்ளார்

நேற்று ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கில் 25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் முதற்கட்டமாக இவ்வருட இறுதிக்குள் 15 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அனுமதியை அமைச்சரவையில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மேல் மாகாண சபையில் நேற்று அமைதியின்மை

கொழும்பு,நவ. 06

மேல் மாகாண சபையின் நேற்றைய அமர்வு ஆரம்பமானபோது, அங்கு ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சபை 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

மேல்மாகாண சபையில் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிசாந்த ஸ்ரீ வர்ணகுலசிங்க, நிரோசா அத்துகோரள ஆகிய இருவரும் நேற்று எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்ததையடுத்தே சபையில் அமைதியின்மை ஏற்பட்டதுடன், சபை அமர்வு 15 நிமிடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிசாந்த ஸ்ரீ வர்ணகுலசிங்க, நிரோசா அத்துகோரள ஆகிய இருவரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை-சிங்கப்பூர் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை



## கூறுகிறார் பந்துல குணவர்த்தன

கொழும்பு,நவ.06

இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மீண்டும் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனைத்துஒப்பந்தங்களையும் மீளாய்வு செய்யக் குழுக்கள் நியமிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


அத்துடன் அவர்கள் சாதகமற்ற விடயங்களைச் சாதகமாகும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை –

இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சுயாதீன நிபுணர்களைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மைத்திரி- மஹிந்த கூட்டு வெகுவிரைவில் கவிழும்

## ஆரூடம் கூறுகிறார் சந்திரிகா




கொழும்பு, நவ.06

மைத்திரி – மஹிந்த கூட்டணி விரைவில் கவிழும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அடித்துக் கூறியுள்ளார்.

ஆட்சி மாற்றம் குறித்து இதுவரை எவ்வித கருத்தையும் சந்திரிகா அம்மையாள் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. ரணிலுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் அவர் களமிறங்கியிருந்தாலும் தற்போது பின்வாங்கியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே, மைத்திரி – மஹிந்த கூட்டணி அமைத்துள்ள புதிய அரசானது விரைவில் கவிழும். அந்தக் கூட்டணியால் முன்நோக்கிச் செல்லமுடியாது. ரணிலை நீக்கிவிட்டு மஹிந்த வைப்பிரதமராக நியமித்தமை ஜனநாயக விரோதம். இதற்கான பிரதிபலனை மைத்திரி நிச்சயம் அனுபவிப்பார் என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பராக்கிரம சமுத்திரத்தின் 10 வான் கதவுகள் திறப்பு



கொழும்பு, நவ.06

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக,பொலனறுவை – பராக்கிரம சமுத்திரத்தின் வான் கதவுகள் அனைத்தையும் நேற்றுக் காலை திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, பொலனறுவை வலயத்துக்கான நீர்ப்பாசனக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 10 வான் கதவுகள் 1 அடி அளவில் திறந்துவிடப்பட்டுள்ளன. இதிலிருந்து நொடிக்கு 1,400 கன அடி நீர் வெளியேற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நீர் வெளியேற்றப்படுவதன் காரணமாக, அம்பன் கங்கையின் நீர் மட்டம் அதிகரிக்கக் கூடுமெனவும், அந்தக் கங்கையை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# பிரதியமைச்சர் பிரியந்தவின் வீட்டுக்குப் பொலிஸ் காவல்

கொழும்பு,நவ.06

புதிய அரசின் கலாசார உள்நாட்டலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி பிரதியமைச்சராக, நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக பிரியந்தவின் வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கு மாரவில பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை பிரதியமைச்சராக அசோக பிரியந்த பதவியேற்ற பின்னர், நாத்தாண்டியா – மரத பிரதேசத்தில் உள்ள வீட்டுக்கு முன்பாக வந்த சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து பிரதியமைச்சர் அசோக பிரியந்தவின் வீட்டுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரதேசத்தில் பொலிஸ் ரோந்துச் சேவையொன்றையும் முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் கூறினர். (ஐ)

# 3 ஆவது ரி-20 போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி



நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது ரி-20 போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தில் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ள நியூசிலாந்து அணி, மூன்று ரி-20 போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இந்தச் சுற்றுப் பயணத்தில் முதலாவதாக மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று பாகிஸ்தான் அணி தொடரை வெற்றிக்கொண்டுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ரி-20 போட்டி, நேற்றுமுன்தினம் டுபாயில் நடைபெற்றது.

இரு அணிகளுக்கிடையிலான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக பாபர் அசாம் 79 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் கொலின் டி கிராண்ட்ஹோம் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, 167 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி, 16.5 ஓவர்கள் நிறைவில் 119 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, ரி-20 தொடரைக் 3:0 என்ற கணக்கில் வெற்றிக் கொண்டுள்ளது.

இதன்போது நியூசிலாந்து அணி சார்பில், கேன் வில்லியம்சன் 60 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் சதாப் கான் 3 விக்கெட்டுகளையும், இமாட் வசிம் மற்றும் மதூத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பாபர் அசாமும், தொடரின் நாயகனாக மொஹமட் ஹபீசும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ)



## எங்களுக்கு அச்சமில்லை

இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரை துணிச்சலுடன் அணுகுமாறு இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் தனது அணி வீரர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் துணிச்சலுடன் இருக்கவேண்டும். சில விடயங்களை வித்தியாசமாகச் செய்யவேண்டும். நாங்கள் தைரியத்தை வெளிப்படுத்தவேண்டும். சிறிது ஆபத்தான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

நாங்கள் கடந்த காலங்களில் முயற்சி செய்யாத ஆபத்தான சில விடயங்களை முயன்றாலே இலங்கையில் வெற்றி சாத்தியம்.

நான் அவ்வாறு விளையாடுவது குறித்து அச்சப்படவில்லை. எனது அணி வீரர்களும் அது குறித்து அச்சப்படுபவர்கள் அல்லர். இலங்கையின் ஆடுகளங்கள் குறித்து நாங்கள் பயப்படவில்லை. பந்து சுழல்வது குறித்தும் அச்சப்படவில்லை.

இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்டில் மூன்று சுழற்பந்து வீச்சாளர்கள் விளையாடுவார்கள். ஸ்டுவார்ட் புரோட் விளையாடமாட்டார்.

டெஸ்ட் போட்டிகளில் 430 விக்கெட்களை வீழ்த்திய ஒருவரை அணியிலிருந்து நீக்குவது கடினம் – என்றார். (ஐ)

## வாழ்த்து மழையில் நனைந்த கோஹ்லி



இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோஹ்லி நேற்று 30ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

தற்போதைய இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் விராட் கோஹ்லி, அணித் தலைவராகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

பல ஜாம்பவான்களின் சாதனைகளை முறியடித்தும், புதிய சாதனைகளைப் படைத்தும் வரும் கோஹ்லி தனது 30வது வயதில் அடியெடுத்து வைத்தார்.

விராட் கோஹ்லியின் பிறந்தநாளை முன்னிட்டு, அவரது ரசிகர்கள் சமூக வலைதளங்களில் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் கிரிக்கெட் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்களும் கோஹ்லிக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

குறிப்பாக, ஐ.சி.சி தனது ட்விட்டர் பக்கத்தில் கோஹ்லி செய்த சாதனைகளை குறிப்பிட்டு அவருக்கு வாழ்த்தைத் தெரிவித்துள்ளது. இந்திய கிரிக்கெட் சபை கோஹ்லிக்காக வீடியோ ஒன்றை ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு வாழ்த்து கூறியுள்ளது.

இந்நிலையில், கோஹ்லி தனது மனைவி அனுஷ்கா ஷர்மாவுடன் ஹரித்துவாரில் தனது பிறந்தநாளைக் கொண்டாடினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மூன்று சதங்களை விளாசிய கோஹ்லி, தொடரையும் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



## கையில் குழந்தையுடன் சானியா மிர்ஷா

ஐதராபாத்தில் உள்ள மருத்துவனையில் இருந்து கையில் குழந்தையுடன் சானியா மிர்ஸா வெளியில் வரும் புகைப்படங்கள் இணையதளத்தில் வைரலாக பரவி வருகின்றன.

ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா கடந்த ஏப்ரல் 12, 2010 அன்று பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வீரர் சொஹைப் மலிக்கை ஹைதராபாத்தில் திருமணம் செய்தார்.

இந்தத் தம்பதியினருக்கு கடந்த 30ஆம் திகதியன்று ஹைதராபாத் மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு இஸான் மிர்ஸா மாலிக் என பெயர் சூட்டினார். இஸான் என்றால் கடவுளின் பரிசு என்பது பொருள்.

இந்த நிலையில், ஹைதராபாத்தில் உள்ள ரெயின்போ குழந்தைகள் நல மருத்துவமனையில் இருந்து சானியா மிர்ஸா கையில் குழந்தையுடன் வெளியில் வரும் புகைப்படங்கள் இணையதளத்தில் வைரலாக பரவி வருகின்றன.

## நீண்டகால தோழியை கரம் பிடித்த இங்கிலாந்து அணியின் தலைவர்

இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் இயன் மோர்கன், தனது நீண்ட காலத் தோழியான தாரா ரிட்ஜ்வேயை திருமணம் செய்துள்ளார்.

இங்கிலாந்து ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் அணியின் தலைவர் இயான் மோர்கன்(வயது-32), சமீபத்தில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை 3-1 என்ற கணக்கில் வென்று கொடுத்தார். அத்துடன் அந்த தொடரில், இரண்டு அரைச் சதங்களுடன் 195 ஓட்டங்கள் குவித்தார்.

இந்நிலையில், மோர்கன் தனது நீண்டகாலத் தோழியான தாரா ரிட்ஜ்வேயை கடந்த வெள்ளிக்கிழமை திருமணம் செய்துகொண்டார்.

இவர்களின் திருமணம், இங்கிலாந்தின் சோமர்செட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பேபிங்டன் ஹவுஸில் நடைபெற்றதாக கூறப்படுகிறது. இந்த திருமண விழாவில் சக அணி வீரர்களான ஜேசன் ராய், அலெஸ்டர் குக், ஸ்டீப் பின், மார்க்வுட், ஜோஸ் பட்லர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தனது தொடர்பான புகைப்படத்தை மோர்கன் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் 'தாரா ரிட்ஜ்வேயுடன் என்ன ஓர் அருமையான நாள்' என குறிப்பிட்டுள்ளார். இந்த தம்பதிக்கு கிரிக்கெட் வீரர்கள், பிரபலங்கள் என பலரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.



## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பு நேற்று மாலை 3 மணியளவில் கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவருடன் அக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும், ஜே.வி.பியின் தலைவருடன் பிமல் ரத்நாயக்க எம்.பி. கே.டி.லால்காந்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. –

கடந்த 26 ஆம் திகதி இந்நாட்டில் நடைபெற்றது அரசியல் நீதியிலான சதித்திட்டமாகும். ஒரு சூழ்ச்சித் திட்டத்தின் மூலமாக புதிய அரசொன்றை அமைப்பதற்கோ அல்லது அரசைக் கவிழ்ப்பதற்கோ நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற செயற்பாட்டினால் ஏற்பட்ட ஜனநாயக மீறல் காரணமாக நாட்டின் மக்கள் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக வடக்கு மக்களும், அரசியலில் ஈடுபடுபவர்கள் என்ற வகையில் நாங்களும் ஜனநாயக மீறலின் காரணமாக ஏற்படத்தக்க பின்விளைவுகளுக்கு முகங்கொடுத்திருந்தோம்.

எனவே, ஜனநாயகம் எங்கே கேள்விக்குரியதாக்கப்பட்டாலும், எவ்வித செயற்பாடுகளால் ஜனநாயகம் பாதிப்புக்கு உட்பட்டாலும் அப்போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு முன்னிற்க நாம் தயாராகவுள்ளோம்.

ஜனநாயகத்துக்கு முரணான சதித்திட்டங்களை நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஓரணியில் நின்று தோற்கடிக்க நாம் முடிவெடுத்துள்ளோம் – என்றார்.

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் பிரதமரை ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்ய முடியாது. இந்நிலையில், பிரதமர் பதவி நீக்கம் மற்றும் புதிய பிரதமர் நியமனம் என்பவற்றின் பின்னணியில் பாரிய அரசியல் சதித்திட்டம் இடம்பெற்றுள்ளது. இது உள்நாட்டில் இருப்பவர்களை மட்டுமன்றி சர்வதேச சமூகத்தினரையும் கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

அரசமைப்பு மீறப்பட்டுள்ளமை காரணமாக நாட்டின் ஜனநாயகமும், மக்களின் இறையாண்மையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

நாட்டின் அரசமைப்புக்குப் புறம்பாக ஆட்சி அமைப்பதற்கோ, அரசைக் கவிழ்ப்பதற்கோ எம்மால் ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் எம்முடன் அமர்ந்திருக்கும் ஜே.வி.பியினருக்கும் எமக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, ஜனநாயகத்துக்கு முரணான சதித்திட்டங்களை நாடாளுமன்றத்தில் ஓரணியில் நின்று தோற்கடிக்க நாம் முடிவெடுத்துள்ளோம்.

இது ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் சார்பாக நாம் ஆற்ற வேண்டிய கடமை. அந்தக் கடமையிலிருந்து நாம் தவறமாட்டோம்.

நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கும் கேவலமான நடவடிக்கை தற்போது நடைபெறுகின்றது. இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை நாம் ஓரணியில் நின்று எதிர்க்கின்றோம். இதுதான் எங்கள் நிலைப்பாடு – என்றார். (ஐ)

## நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் தீபாவளி நிகழ்வு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும் பங்கேற்றார். அங்கு ஜனாதிபதிக்கும் சம்பந்தனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடந்தது. இதன்போதே சம்பந்தன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நேற்று மாலை நடந்த இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட புதிய பிரதமர் நியமனம் மற்றும் நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமர் நியமனம், நாடாளுமன்றம் ஒத்திவைப்பு ஆகியவை சட்டத்துக்கு முரணானவை. இவை ஜனநாயகத்துக்கு விரோதமானவை. இவற்றை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும் என்று இரா. சம்பந்தன் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார் எனத் தெரியவருகிறது.

அத்துடன், நாடாளுமன்ற அமர்வுகளை உடனடியாக கூட்டுமாறும் சம்பந்தன் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் எனவும் கூறப்பட்டது.

தான் அரசமைப்புக்கு உட்பட்டே அனைத்தையும் செய்தார் என ஜனாதிபதி இதன்போது சம்பந்தனிடம் கூறியுள்ளார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசை எக்காரணத்துக்காகவும் யார் நினைத்தாலும் பிரிக்கவே முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மைத்திரி – மஹிந்த தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவு வழங்கும் வகையில் 'மக்கள் மகிமை' ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மூன்று வருடங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடமையாற்றியதன் பின்னரே ஜனாதிபதி இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கடமையாற்றுவது இலகுவான ஒரு விடயம். நாட்டின் எதிர்காலக் குழந்தைகளின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் என்னால் கூட இத்தகைய துணிச்சலான நடவடிக்கையை எடுத்திருக்க முடியாது.

நாட்டின் எதிர்கால நலனுக்காகவே நானும் கடமையாற்றப் போகின்றேன்.

பலரது அர்ப்பணிப்புடன் அமைக்கப்பட்டுள்ள தற்போதைய அரசை எக்காரணத்துக்காகவும் யார் நினைத்தாலும் பிரிக்கவே முடியாது – என்றார். (ஐ)

# பஸ் கட்டணம் குறைகின்றது!

எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ள நிலையில், பஸ் கட்டணங்களையும் இரண்டு வீதத்தால் குறைப்பதற்கு, தனியார் பஸ் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், பஸ் கட்டணங்களைக் குறைப்பதற்குத் தயாராகவுள்ளதாக, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், எரிபொருட்களின் விலைகள் குறைப்பிற்கமைய பஸ் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில், குறித்த நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி, தகுந்த தீர்மானமொன்றை எடுப்பதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பஸ் கட்டணங்களின் திருத்தம் தொடர்பில், எதிர்வரும் நாட்களில் சரியான தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக, அனைத்து மாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் விஜித்குமார சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## பெரும்பான்மையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி கூட்டுவதாக ஜனாதிபதி தனக்கு வாக்குறுதி வழங்கியிருந்தபோதிலும் அவர் அதனை மீறியுள்ளார் எனவும் சபாநாயகர் குற்றம்சாட்டியுள்ளார்.

சபாநாயகரால் நேற்று விடுக்கப்பட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

நாடு குழப்பநிலையை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில், இதுவரை காலமும் மௌனித்து இருந்தபோதிலும், நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பெரும்பாலான உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கும் மனச்சாட்சியின்படி செயற்படுவதும் எனது தேசிய பொறுப்பு என்பதை நினைவு கூருகின்றேன்.

ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரசமைப்புக்கு முரணான செயற்பாடு எனத் தெரிவித்தும் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சிகளின் 116 பேர்கையொப்பத்துடன் என்னிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நியாயமானது என நான் உணர்கின்றேன்.

நாடாளுமன்றத்தைச் சட்ட ரீதியாகக் கூட்டுவதற்கு இடமளிக்காமல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பறித்துள்ளதாக பெரும்பாலானோர் தெரிவிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நியாயத்தின் அடிப்படையில் எனது நிலைப்பாட்டை உலகுக்கு எடுத்துரைப்பது அவசியமாகும்.

நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்தும் அரசமைப்புக்கு முரணானவை, சம்பிரதாயத்துக்கு விரோதமானவை என்பது பெரும்பாலானோரின் நிலைப்பாடாக இருக்கும் நிலையில் புதிதாக ஒரு தரப்பினரால் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான இயலுமை கிடைக்கும் வரை முன்னைய நிலையை ஏற்கவேண்டிய சூழல் எனக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனநாயகச் சமூகத்தில் இடம்பெறக்கூடாத இந்தச் சம்பவம், ஆயுதமின்றி மேற்கொள்ளப்பட்ட வெறுக்கத்தக்க செயல் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஜனாதிபதி என்னிடம் வாய்மூலம் தெரிவித்த வாக்குறுதிக்கமைய நடவடிக்கைகளை முன்னெடுப்பாராயின் எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டி, நாட்டை நிலைப்படுத்துவது சபாநாயகர் என்ற ரீதியில் எனது கடமை, என்பதால், ஜனாதிபதி இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதும் அவரது கடமையாகும் – என்றுள்ளது. (ஐ)

## சபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மஹிந்த–மைத்திரி கூட்டணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்தராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவுக்கும் ஆதரவு தெரிவித்து 'ஜன மகிமய' என்ற பெயரில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்றுக் கொழும்பில் பாரிய பேரணியை நடத்தியது.

நாடாளுமன்ற வளாகத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் நடைபெற்ற இப்பேரணியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அக்கூட்டணியின் எம்.பியான சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவைப் பதவிநீக்கம் செய்துவிட்டு அரசமைப்பின் பிரகாரமே மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். இது தவறெனில் ஐக்கிய தேசியக்கட்சி நீதிமன்றத்தை நாடியிருக்கலாம்.

ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் செயற்பட்டுள்ளார் என்பதை அறிந்து வைத்துள்ளதாலேயே அக்கட்சியினர் நீதிமன்றத்தை நாடவில்லை.

அலரி மாளிகையைவிட்டு இன்னும் 48 மணிநேரத்துக்குள் ரணில் விக்கிரமசிங்கவும், அவரின் சகாக்களும் வெளியேறவேண்டும். இல்லாவிட்டால் அலரிமாளிகையை நோக்கி நாம் படையெடுப்போம்.

அதேபோல் நாடாளுமன்றத்துக்குள் பக்கசார்பற்றவராகவே சபாநாயகர் செயற்படவேண்டும். 16 ஆம் திகதிக்கு முன்னர் சட்டத்துக்கு முரணான வகையில் அவர் நாடாளுமன்றத்தைக் கூட்டினால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம்–என்றார். (ஐ)

## முன்வைத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசுக்கு ஆதரவு வழங்கும் விதத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற, 'மக்கள் மகிமை' ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :–

மகிந்த ராஜபக்ஷவுடன் கடந்த 4 வருடங்களின் பின்னர் அதுவும் நவம்பர் மாதத்தில் இணைந்துள்ளமை மகிழ்ச்சியானது.

இலங்கையைப் பெறுத்தவரையில் நவம்பவர் மாதம் ஒரு சிறப்பான மாதமாக அமைந்துள்ளது.

நான் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்ஷவை அரசமைப்பின்படி பிரதமராக நியமித்தமை உருவங்களில் ஏற்பட்ட மாற்றமல்ல மாறாக இது நாட்டுக்கு உசிதமற்ற ஒருவரை நீக்கி சரியான ஒருவரை பிரதமராக நியமித்தேன்.

நான் பிரதமர் பதவியை ஏற்குமாறு கரு ஜயசூரியவிடம் வேண்டுகோள் விடுத்தேன். அவர் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. காலில் விழாத குறையாகவே கரு ஜயசூரியவிடம் கேட்டேன். ஆனால் ஒரு நாள் கரு ஜயசூரிய ரணிலுடன் என்னிடம் வந்து இவருக்கு எதிராக எப்படி வருவது என்று என்னிடமே கேட்டார்.

அதேபோல் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்து பிரதமர் பதவிக்கு வருமாறு அழைப்பு விடுத்தேன். அவரும் அதற்கு மறுப்புத் தெரிவித்து ரணிலுடன் மோத முடியாதெனத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர்த்து எதையும் செய்ய இயலாதென இருவரும் தெரிவித்ததனால் நான் சிந்தனை செய்தேன். நாட்டை அபிவிருத்தி செய்து வழிநடத்தக் கூடிய ஒருவரை பிரதமராக நியமிக்க எண்ணினேன். இதனால் ரணில் விக்கிரமசிங்கவை மோதிக்கொண்டு செல்லக்கூடிய மஹிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் பதவியை வழங்க நான் தீர்மானித்தேன்.

வெளிநாட்டுச் சக்திகளின் நிகழ்ச்சிநிரலுக்கு வேலைசெய்ய முடியாது. இப்போது ஒரு கூட்டம் வெளிநாட்டுத் தூதரகங்கள் முன்னால் விழுந்து கிடக்கின்றது.

சட்ட வல்லுனர்களுடன் ஆராய்ந்தே இதற்கான தீர்மானத்தை எடுத்தேன். நான் தனியாகத் தீர்மானம் எடுக்கவில்லை. அனைத்து நடவடிக்கைகளும் அரசமைப்பின்படியே இடம்பெற்றன. இதில் எவ்வித சர்ச்சைகள் இருந்தால் யாரும் உயர் நீதிமன்றம் செல்ல முடியும்.

வடக்கிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும். வீடமைப்புத் திட்டத்தை வடக்கில் நடைமுறைப்படுத்துவதற்கு சுவாமிநாதன் போன்ற அமைச்சர்கள் கடந்த அரசில் முட்டி மோதிக்கொண்டதினால் ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை. அதை நாம் இப்போது நடைமுறைப்படுத்துவோம்.

பெரும்பான்மை என்பது எப்போதோ உறுதியாகி விட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நாடாளுமன்றில் 113 உறுப்பினர்கள் எப்போதோ உறுதியாகிவிட்டனர். 70 வீதமான நாட்டு மக்கள் நான் எடுத்த முடிவு சரி என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இந்திய அரசை என்னுடன் பிரிப்பதற்காக ரணில் சதிவேலை செய்கிறார். அமைச்சரவை விடயங்களை வெளியில் திரிபுபடுத்திக்கூறி இதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமக்குப் பௌத்தத்தைக் கொடுத்த இந்தியாவுடன் நான் உறவை பேணுவேன். அவர்களுடன் சிறந்த உறவு பேணப்படும். என்ன எதிர்ப்பு வந்தாலும் நான் எடுத்த முடிவில் பின்வாங்க மாட்டேன். எனது பயணத்தைத் தொடர்வேன்.

கடந்த மூன்றரை வருடங்களில் அனைவரிடத்திலும் வரி சுமத்தப்பட்டது. பழ வியாபாரியிடம் வரி, லொத்தர் விற்பவரிடம் வரி அனைத்தும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன– என்றார். (ஐ)

# அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

## கிருபா லேணர்ஸ்
## KIRUBAA LEARNERS

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக
(A) தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 454 6960



கல்விச் சேவைக்காக
ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது.

### ★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**யாழ்ப்பாணம்**

சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

**வவுனியா**

வவுனியா 024 222 7777

**மன்னார்**

மன்னார் 023 225 1656

**கிளிநொச்சி**

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி.
வடமாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!




தூய்மையானதும்
நீண்டகாலம் பாவிக்கக்
கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு

முடியாத பாசம்
உனக்காக அழும் விழிகள்
நீ மட்டும் சாய்ந்து கொள்ளத் தோள்கள்
உன்னைப் பார்த்துக்கொள்ளும்
ஒரேயொரு தேவதை
'அம்மா'



LITRO GAS லிற்றோ தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்

## S.V. முருகேசு

No. 154, Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899, 021 492 5831
No. 106, Hospital Road, Jaffna.
T.P : 021 492 5830, 021 222 4341
Fax: 021 222 4341

No.288, A9 Road, Karadippokku, Kilinochchi. T.P. 021 492 5827


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.